சட்ட அடிப்படையில் செய்யவேண்டும். ஆகவே, பட்டா வழங்குவது என்பதை ஒரு கால வரையில் செய்ய முடியும் என்று நான் கருதவில்லை.

*409 Q.—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have received any representation from certain members of the Legislative Assembly on 1st February 1966 to extend the time limit for filing applications for Ryotwari Patta under Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963; and

(b) if so, the action taken thereon?

The Hon. Sri V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) It has been decided to amend the rules suitably.

திரு. செ. மாதவன் : ஆக்ட் 26 ஆஃப் 1963-ன் கீழ் பிறப்பிக்கப் பட்ட விதிகளுக்கும், இந்த விதிகளுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. மனு கொடுக்காவிட்டாலும் 'ஸுவோ மோட்டு' ஆக அதிகாரிகள் பரிசீலித்து பட்டா வழங்கலாம் என்று பொது விதிகள் இருக்கின்றன. அப்படியிருக்கும்பொழுது 6 மாத காலத்திற்குள் பட்டாவுக்கு மனுப் போடவேண்டும் என்று இருப்பதுபற்றி பரிசீலனை செய்யப்படுகிறதா? 'ஸுவோ மோட்டு' ஆக என்குயரி நடத்தும்பொழுது அந்தக் காலம் வரைக்கும் பட்டாவுக்கு மனு கொடுக்கலாம் என்று உத்தரவு பிறப்பிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : பரிசீலனையில் இருக்கிறது என்று நான் சொன்னேன்.

திரு. செ. மாதவன் : ஆறு மாதம் உத்தரவிட்ட தேதியிலிருந்து தான் என்பதற்கு உத்தரவிடப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். சர்க்காருடைய தகவல்களிலிருந்து 26 ஆஃப் 63 ஆக்ட்டுப்படி புதிய உத்திரவுகள் போடப்பட்டிருக்கின்றன. இப்பொழுதிருக்கின்ற விதிப் பிரகாரம் நோட்டிஃபிகேஷன் டேட்டிலிருந்துதான் 6 மாதம் என்று இருக்கிறது. இதைப்பற்றி சட்ட அமைச்சர் அவர்களைக் கூட கலந்து பேசினோம், அவர்களிடம் விளக்கம் சொன்னோம். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். உத்திரவிட்டதற்குப் பின்னாலேதான் அதாவது செட்டில்மெண்ட் தாசில்தார் அந்த இடத்திற்குச் சென்று 'ஸுவோ மோட்டு' என்குயரி நடத்துகின்றபொழுதுதான் அங்கேயுள்ள மக்களுக்கு இது சம்பந்தமாக மனுப் போடவேண்டும் என்ற விஷயம் தெரிகிறது. ஆகவே 'ஸுவோ மோட்டு' என்குயரிக்கு அந்த இடத்திற்குச் செல்லுகின்ற தேதியிலிருந்து ஆறு மாத காலம் கொடுக்கலாம் என்று உத்தரவை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது நாம் யோசித்துக் கொண்டிருப்பது அந்தந்தக் கிராமங்களிலே நோட்டிஃபிகேஷன் செய்து ஆறு மாதங்கள் வரையிலும் புதிதாக

7th November 1966]

பட்டாக்களுக்கு மனுப் போடலாம் என்பதைத்தான். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது ஸுவோ மோட்டுவாக சர்க்காரிலே பட்டாக்கள் வழங்கலாம் என்ற காரணத்தினாலே அது வரையில் ஒத்திப்போட்டால் என்ன என்று கேட்கிறார்கள். அதில் நடைமுறையில் பல கஷ்டங்கள் வரும். யார் யாருக்கு குடிவாரம் இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்களோ அந்த அடிப்படையில்தான் பட்டா கொடுக்கவேண்டும். அதற்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் மனுப் போடவேண்டும். அப்படி அவர்கள் போட்டாலும் போடாமல் இருந்தாலும், சர்க்காருக்கு உண்மையாகக் கொடுக்கலாம் என்ற நிலைமை இருந்தால் அவர்கள் பர்மிசபிள் அயிட்டமாகப் போடலாம் என்று இருக்கிறது. ஆகவே, அவர்கள் என்குயரிக்குப் போன தேதியிலிருந்து காலம் கொடுத்தால் அதற்குப் பிறகு பரிசிலனை செய்வதற்குக் காலதாமதம் ஏற்படும். அந்தச் சட்டத்தை விரைவாக நடைமுறைக்குக் கொண்டு வருவது கஷ்டமாக இருக்கும். காலத்தை ஒத்திப் போடுவதற்கு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

*410 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state the details of steps taken so far for the enforcement of Inam Estates Abolition Act and the Minor Inams Abolition Act?

THE HON. SRI V. RAMAIAH: A statement [a] is placed on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மூன்று வருட காலம் ஆகியிருக்கிறது. எத்தனை இனம்கள் சம்மந்தமாக செட்டில்மெண்ட் முடிந்து பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் சொல்லமுடியுமா?

கனம் திரு. வெ. ராமையா: நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். செட்டில்மென்ட் ஆவதற்கு நிறையக் கஷ்டங்கள், சங்கடங்கள் இருக்கின்றன ....

திரு. மீ. கலியாணசுந்தரம்: அப்படியானால் இன்னும் ஒரு கிராமத்தில் கூட ஆகவில்லையா?

கனம் திரு. வெ. ராமையா: இல்லை. நான் குறிப்பிட்டேன். செட்டில்மெண்ட் ஆவதற்கு காலதாமதம் ஆகின்றது என்று.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மூன்று வருஷங்கள் ஆகியும் ஒரு கிராமத்தில் கூட பட்டாக் கொடுக்காமல் இருக்கிறது என்றால் இது சட்டத்திலே இருக்கின்ற கோளாறு அல்லது நிர்வாகத் திறமையிலே உள்ள குறைபாடா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: சட்டத்திலே கோளாறு இல்லை, நிர்வாகத் திறமைக் குறைபாடும் இல்லை. இதிலே எத்தனையோ நிலைமைகள் ஏற்படுகின்றன. ஹைக்கோர்ட்டுக்குப் போகவேண்டிய

---

a Printed as Appendix VI on pages 567–570.